**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் -2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் 2 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 16,395,006 தொகையான முதலீட்டிலிருந்தான வட்டி பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகள் மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 5,481,500 பெறுமதியான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் மேலும் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீட்டை இறுதி செய்வதன் மூலம் கணக்குகள் சீர்செய்யப்பட்டுள்ளன. | -மேற்படி- |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களின் பிரகாரம் ரூபா 9,844,298 தொகையைக் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நேரடி வைப்புக்கள் கொவிட்-19 அத்தியாவசிய விநியோக நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபட்டுள்ளதுடன் ரூபா 8,647,298 தொகையான வங்கி வைப்புக்கள் இனங்காணப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளன. | நேரடி வைப்புக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னையய ஆண்டுகளின் போது செயற்பாடற்ற சங்கங்களிலிருந்து பெற | கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பட்டியல் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா | கடன் வட்டி சரியாக கணிப்பீடு செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| வேண்டிய கடன் வட்டி ரூபா 892,864 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால் பெற வேண்டிய கடன் வட்டி மற்றும் திரண்ட மிகை என்பன அந்தத் தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | 7,704,272 தொகையான கடன் வட்டியானது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீர்செய்யப்பட்டுள்ளன. | கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயங்கள் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு சங்க கடன்கள் | 47,164,884 | மீதி உறுதிப்படுத்தல்கள் | பல வருடங்கள் பழமையான கடன் மீதிகள் காணப்படுகின்றதுடன் செயற்பாட்டிலுள்ள சங்கங்களை இனங்கண்ட பின்னர் கடன் உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் | 45,525 | மீதி உறுதிப்படுத்தல்கள் | இவ் விடயம் குறித்து ஆய்வு செய்து அதனை தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 20,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் | இது மிகை நிதியத்தில் இருந்து பெறவேண்டிய மீதியொன்றாகும், மேலும் குறித்த விடயத்தை ஆராய்ந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | கடன்களை வழங்குதல் ஊவா மாகாணம் | 5,439,905 | மீதி உறுதிப்படுத்தல்கள் | மீதி உறுதிப்படுத்தல்களை பெற்று கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 132,772,822 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 92,070,503 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 40,702,319 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பங்களிப்புக்களிலிருந்தான வருமானம் ரூபா 19,317,908 ஆல் அதிகரித்தமை, அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு ரூபா 6,057,034 ஆல் குறைவடைந்தமை, கூட்டுறவு தின கொண்டாட்டங்கள் தொடர்பான செலவினங்கள் ரூபா 11,162,955 ஆல் குறைவடைந்தமை, வெளிநாட்டு பிரயாண செலவினங்கள் ரூபா 40,090,179 ஆல் குறைவடைந்தமை மற்றும் மீளாய்வாண்டின் செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக பிரசுரிப்புக்கள் தொடர்பான செலவினங்கள், தெளிவூட்டல் தொடர்பான செலவினங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான செலவினங்கள் ஏற்படாமை என்பன இம் முன்னேற்றத்திற்காக பிரதானமாக பங்களித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 54 செயற்பாடற்ற சங்கங்கள் மற்றும் 2 செயற்பாட்டில் உள்ள சங்கங்கள் தொடர்பாக முறையே ரூபா 31,287,451 மற்றும் ரூபா 3,016,480 உள்ளடங்கிய ரூபா 34,303,931 கூட்டுமொத்தமான நிலுவைக் கடன் மீதி மற்றும் ரூபா 7,704,272 வட்டி என்பன 2020 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எந்தவொரு பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>குறித்த கடன் மற்றும் வட்டி ஆகியவை 8 ஆண்டுகள் முதல் 56 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியின் போது அறவிடப்படாத மீதிகளாக காணப்பட்டன. மேலும் 20 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,450,900 கடனில் கடன் தவணைப்பணம் எதுவும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 2012 ஆம் ஆண்டில் கொபேகனே பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,000,000 கடன் 54 தவணைகளில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க | 2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் அறவிடப்பட்டிருக்காத மாகாண சங்கங்களின் கடன்களை அறவீடு செய்யும் பணியை மாகாண திணைக்களங்களுக்கு ஒதுக்குதல், இத்திணைக்களத்தின் செயற்பாடற்ற கடன்களை பதிவழித்ததல், 2000 ஆம் ஆண்டின் பின்னர் வட்டி நிவாரணம் வழங்கி அறவிடப்பட்டிருக்காத கடன்களை மீள்பட்டியலிடுதல் அல்லது சட்ட நடவடிக்கை எடுத்தலின் பின்னர் அறவீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டில் குறித்த கடனில் ஒரு தவணைப்பணம் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | 1997 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டு நடைமுறை சொத்துகளின் கீழ் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 2,666,000 தொகையான கூட்டுறவுப் பாடசாலைக் கடன், 2012 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 1,999,600 தொகையான செயலாற்றல் முற்பணங்கள் மற்றும் பெறவேண்டிய ரூபா 1,184,000 தொகையான நீதிமன்ற நட்டஈடு என்பவற்றை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கோவைகளை தேடுவதன் மூலம் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் ரூபா 184,000 நீதிமன்ற நட்டஈட்டை சாத்தியமானளவு விரைவில் தீர்ப்பனவு செய்வதற்கும் உத்தியோகத்தர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு 42 கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ரூபா 146,999,075 பங்களிப்பு நிதியத்திற்கு பெறப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக 28 சங்கங்களுக்காக ரூபா 120,930,257 பங்களிப்புகள் பெறப்பட வேண்டியுள்ளன. அதில், மீளாய்வாண்டில் 16 சங்கங்களிடமிருந்து ரூபா 47,272,173 பங்களிப்புகள் மாத்திரமே அறவீடு செய்யப்பட்டுள்ளன. | முன்னைய ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை பங்களிப்புக்களை அறவீடு செய்வதற்கு நடைமுறை ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | -மேற்படி- |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 219,649,334 தொகையான பங்களிப்பு மீதி பெறப்பட வேண்டியிருந்ததுடன் அதில் உயர் சதவீதமான 73 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 161,338,906 தொகையானது எடியூகேசன் எம்பிளோயீஸ் கோப்பரேட்டிவ் சொசைட்டி லிமிடெட்டிலிருந்து பெறப்பட வேண்டியிருந்தது. அம் மீதிகள் ரூபா 28,794,753 கூட்டுமொத்தமான 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகளையும் 01 ஆண்டு | முன்னைய ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை பங்களிப்புக்களை அறவீடு செய்வதற்கு நடைமுறை ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் பெறப்பட வேண்டிய ரூபா 190,854,581 மீதியையும் உள்ளடக்கியிருந்தன.

(உ) சுழற்சி நிதியம்

| | | | |
|---|---|---|---|
| (i) | 09 மாகாண கூட்டுறவு சங்கங்களுக்கு 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நிதியத்தால் வழங்கப்பட்ட ரூபா 290 மில்லியன் கடனில், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 134 மில்லியன் தொகை பெறப்பட வேண்டியிருந்தது. மேலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் வட மத்திய மாகாணத்தில் இருந்து எந்தவொரு பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்காத கடன்களின் பெறுமதி ரூபா 5,826,500 ஆகும். | இக் கடனில் வடமத்திய மாகாணத்திலிருந்தான 58வது கடன் நிலுவை ரூபா 5,826,500 ஆக காணப்பட்டது. ஏனைய அனைத்து மாகாணங்களும் உடன்படிக்கைகளின் பிரகாரம் முறையாக பணம் செலுத்துகின்றன. | -மேற்படி- |
| (ii) | கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனம் மற்றும் ஸ்ரீ லங்கா கோப்பரேட்டிவ் மாக்கற்றிங் அசோசியேஷன் லிமிட்டட் ஆகியவற்றிற்கு 2011 ஆம் ஆண்டில் முறையே ரூபா 152.5 மில்லியன் மற்றும் ரூபா 25 மில்லியனை நிதியம் வழங்கியிருந்தது. கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்திலிருந்து 2012 ஆம் ஆண்டில் ரூபா 60 மில்லியன் தொகை மாத்திரமே அறவீடு செய்யப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 இல் மேலும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 92.5 மில்லியன் தொகையாகும். 2020 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 4.4 மில்லியன் தொகையில் ஸ்ரீ லங்கா கோப்பரேட்டிவ் மாக்கற்றிங் அசோசியேஷன் லிமிட்டட்டிடமிருந்து | கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 92.5 மில்லியன் நிலுவை கடன் மீதியை தீர்ப்பனவு செய்யுமாறு கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்தின் தலைவருக்கு தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது எந்தவொரு தவணைப்பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 2020 ஆம் ஆண்டில் கொவிட்-19 இற்காக அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்காக ரூபா 248,656,984 தொகை நிதியத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 96,325,848 தொகை மாத்திரமே 2020 ஒக்தோபர் 31 வரை அறவீடு செய்யப்பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 152,331,136 தொகையானது நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்புகளில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | நாட்டில் எதிர்பாராத விதமாக பரவிய கொவிட்-19 தொற்றுநோயால் நாடு மூடப்பட்டதன் விளைவாக, மாகாண கூட்டுறவு சங்கங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காததால், அந்த கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்காக குறித்த செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுழற்சி நிதியம் நிறுவப்பட்ட நோக்கங்களுக்காக மாத்திரமே செலவினங்களை மேற்கொள்வதற்கு பொறுப்பேற்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1974 சனவரி 10 ஆம் திகதிய 93/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட கூட்டுறவு சங்க விதிகளின் 43 ஆம் பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் அதன் தேறிய ஆண்டு இலாபம், கூட்டுறவு கல்வி, விரிவாக்கம் மற்றும் பிரசித்தப்படுத்தல் நோக்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவ வினைத்திறனை மேம்படுத்துதல் மற்றும் பயன்படுத்தப்படக்கூடிய பணங்களிற்காக கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகளை வழங்குதல் என்பவற்றிற்கு பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும். அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது நிதியத்துக்கான கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பு ரூபா 120,930,257 ஆக இருந்துடன் மொத்தச் செலவினம் ரூபா 4,926,669 ஆக இருந்தது. இந்தச் | கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக ரூபா 01 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2020 மார்ச் முதல் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையின் போது சங்கங்களால் புதிய செயற்திட்டங்கள் எதுவும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் அதற்கான கோரிக்கைகள் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால், சங்கங்களுக்கு செயற்திட்டங்களின் சார்பில் உதவிகளை வழங்க முடியாதிருந்தது. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்படுவதற்கு பொறுப்பேற்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினத்தில் ரூபா 2,289,879 தொகை கூட்டுறவு தினக் கொண்டாட்டங்கள், கிராமப்புற வங்கிச் சட்டங்களின் திருத்தம் மற்றும் பயிற்சிச் செலவுகளுக்குச் செலவிடப்பட்டிருந்ததுடன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி வழங்குவதற்காக எந்தச் செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 105 நிதிக்கூற்றுக்களை பெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 54 நிதிக்கூற்றுக்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்தன. மேலும், கோப்பரேட்டிவ் பிறிசன் டிப்பாற்மென்ட் சனச லிமிட்டட், ரீ பிரடியூசர்ஸ் அசோசியேஷன் லிமிட்டட், மீன்பிடி கூட்டுறவு சங்கம் மற்றும் ப்ப்ளிக் சேவிஸ் கிறயூவேட் சனச லிமிட்டட் ஆகியவற்றுடன் தொடர்புடைய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பெறப்பட்டிருக்காத அதே நேரம் ப்ப்ளிக் சேவிஸ் சனச மற்றும் 14 கூட்டுறவு சங்கங்கள் முறையே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள்/ சங்கங்கள் மூடப்பட வேண்டியிருந்தன, அதனால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டதுடன் குறித்த காரணத்தின் அடிப்படையில், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிதிக்கூற்றுக்களை பெற முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை ஆற்றுவதற்கு பொறுப்பேற்க வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 111 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் மீதான கணக்காய்வு அறிக்கைகள் 37 நிதிக்கூற்றுக்களிற்கு மாத்திரமே வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட 37 கணக்காய்வு அறிக்கைகளில் பதினேழு அறிக்கைகள் 2020 ஆம் ஆண்டுக்கு முன்னரான நிதிக்கூற்றுக்களிற்கானதாகும். அத்துடன் வழங்கப்பட்ட 54 நிதிக்கூற்றுக்களில், 34 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவற்றின் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் சங்கங்கள் மற்றும் சங்கங்களால் சமர்ப்பிக்கப்பட்ட 54 நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வின் பின்னர் 2020 ஆம் ஆண்டில் நாற்பத்தாறு கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன, 08 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு மாத்திரமே 2020-12-31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டு அவற்றின் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்காமல் காணப்பட்டன. | கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் பொறுப்பேற்கப்பட வேண்டும். |